1979 ஏப்ரல் 11]

திரு. என். பழனிவேல் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழநி தாலூகாவில் உள்ள எரமநாயக்கன்பட்டி, கஞ்ச நாயக்கன்பட்டி, வத்தகவுண்டர்வலசு, சங்கஞ்செட்டி வலசு மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் உள்ள மக்கள், குறிப்பாக சங்கஞ்செட்டிவலசு போன்ற ஒதுக்குப்புறங்களில் உள்ள மக்கள் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் இல்லாமல் இன்றைய தினம் மிகவும் சிரமப்படுகிறார்கள். அமைச்சர் அவர்கள் ஒன்றியங்கள் எல்லாம் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன என்று கூறினார்கள். அப்படி ஒன்றியங்கள் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே இதை உடனடியாக நீக்கி, நம்பர் 1 என்று சொல்லப்பட்டிருக்கிகிற ஊர்களுக்காவது இந்த ஆண்டு குடிதண்ணீர் வாரியத்தின் மூலம் தண்ணீர் சப்ளை செய்ய ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வத்திராயிருப்பு பேரூராட்சியினை நகராட்சியாக்கல்

*வினா எண். 688— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு பேரூராட்சியினை நகராட்சியாக மாற்றும் உத்தேசம் அரசு செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு இதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த திருவில்லிபுத்தூர் தொகுதி வத்திராயிருப்பு பேரூராட்சி பயணிகள் அதிகமாகச் செல்லும் ஒரு சுற்றுலாத் தொகுதி. கீழக்கரையில் இருப்பதுபோன்ற அதே வருமானம் பேரூராட்சிக்கு வருகிறது. அங்கே விவசாயிகளின் விளை பொருள்களை எல்லாம் ஏற்றுமதி செய்கிறார்கள். அரசாங்க

அலுவலகங்கள் இருக்கின்றன. கீழக்கரையை நகராட்சியாக மாற்றியதைப்போல, இதையும் நகராட்சியாக மாற்றுவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நகராட்சியாவதற்குரிய அந்தஸ்தைப் பெற வத்திராயிருப்பில் மக்கள் தொகையோ அல்லது வருமானமோ இல்லை. ஆகவே, தாமரைக்கனியின் ஆசை இப்போது கனியாக வாய்ப்பில்லை.

குடிசை மாற்றுப் பணிகள்.

*வினா எண் 689—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவியுடன் நடைபெற்றுவரும் குடிசைப் பகுதி முன்னேற்ற திட்டம் எதிர்பார்த்த அளவு வேகமாக செயல்படவில்லை என்று சமீபத்தில் இங்கு வந்திருந்த உலக வங்கி குழு சுட்டிக்காட்டியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ)

விவர அறிக்கை *அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, பொதுவாக குடிசைப் பகுதி முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு இல்லை என்பது உண்மைதான். ஆனாலும் கூட, அதை நாம் மாற்றவேண்டிய நிலைமையில் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, சென்னை நகருக்கு அதிகமான நபர்கள் வருவதைத் தடுப்பதற்காக— இம்மிகிரேஷன் முறை— அமல்படுத்தி, அதன் மூலம் கட்டுப்பாடு செய்து, இங்கேயுள்ள மக்களுக்கு வீட்டு வசதி செய்து விட்டு, மீண்டும் பிற மக்களுக்கு அந்த வசதி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, கேள்வி குடிசைப் பகுதி மேம்பாடு திட்டம் பற்றியதாகும். இங்குள்ள புள்ளிவிவரங்கள் தெரிவிப்பது என்னவென்றால் 1978–79-ல் 15,482 குடும்பங்கள் இருக்கும்

[*617ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது].